பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 24 புதன்கிழமை 11.10.2023 கதிர் 334

# இந்து சமுத்திர நாடுகளின் 23ஆவது கூட்டம் இன்று

## கொழும்பில் தொடங்குகின்றது






இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின்அமைச்சர்கள்மட்டத்திலான 23ஆவது கூட்டம் இன்று கொழும்பில தொடங்குகின்றது.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23 உறுப்பு நாடுகளும் 11 உரையாடல் கூட்டாளர்களும் காணப் படுகின்றதோடு23ஆவதுஅமைச்சர்கள் கூட்டத்தில்2023முதல்2025வரையான காலப்பகுதிக்கானதலைமைப்பதவியை இலங்கை ஏற்கவுள்ளது.

இந்நிலையில்இக்கூட்டத்தில்பங்கேற் பதற்காக இலங்கைக்கு வருகை தந்து ள்ள அயலுறவுத்துறை அமைச்சர் களுடன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று சந்தித்துப் பேசினார்.

மலேசியாவின்அயலுறவுத்துறை ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

இன்றைக்குஒருசுவாரஸியமான அறிவியல் தகவலைப் பார்க்கலாம். வியாழன் கிரகத்தின் நிலவான யுரோப்பாவில் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியங்களை நாஸா முதற்றடவையாகக் கண்டறிந்துள்ளது.

நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி இதனைக் கண்டுபிடித்துள்ளது. தொலைநோக்கியின் அகச்சிவப்பு கேமராஇந்தநிலவின்தனித்துவமான நிலப்பரப்பின்படங்களைஎடுத்தபோது, அதில் ஏராளமான கார்பன் டை ஆக்சைடுவாயுகாணப்படுவதற்கான சாத்தியங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது அங்கு உயிரினங்கள் இருப்பதற்கான புதிரான தடயங்கள் என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால், அதனைப் புரிந்துகொள்வதற்கும் விரிவாக விளங்கிக்கொள்வதற்கும அறிவியலாளர்களுக்கு ☞ 2

## ஜப்பானிய உதவி கையளிப்பு

அவசர பதிலளிப்பு வேலைத்திட்டம், பாடசாலை மாணவர்களுக்கான உணவு வேலைத் திட்டம் மற்றும் தேசியசமூகபாதுகாப்புவேலைத்திட்டம் என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகளின் உணவுவேலைத்திட்டத்தின்கீழ்ஜப்பான் அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜப்பானின்வெளிநாட்டுஅலுவல்கள் தொடர்பிலான பாராளுமன்ற உப அமைச்சர் கொமுரா மற்றும் இலங் கைக்கான ஜப்பான் தூதுவர் ☞ 2

## தென்னாபிரிக்க அமைச்சருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

### உண்மை ஆணைக்குழுவிற்கு உதவியதற்காக



தென்னாபிரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ☞ 8

## பிரிட்டன் அமைச்சர் அன்னே மெரி ரணிலுடன் நேற்று சந்தித்து பேச்சு

### பல விடயங்கள் குறித்தும் ஆராய்வு



இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங் கத்தின் கூட்டத்தில் பங்கேற்க நாட்டிற்கு வருகை தந்திருக்கும் ஐக்கிய இராச்சியத்தின் இந்து - பசுபிக் அலுவல்கள் ☞ 2

## இந்து சமுத்திரம் மற்றும் வான்வெளியை நிரந்த அமைதி வலயமாக்க பாடுபடுவோம்

### இலங்கை அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் ஊடாக இந்து சமுத்திரம் மற்றும் வான்வெளியை நிரந்தர அமைதி வலயமாக அறிவித்துள்ளஇலங்கை, அதனை தொடர்ச்சியாக தக்கவைத்துக்கொள்ள அர்பணிப்புடன் செயற்படும் என தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சாதமான பாதுகாப்பு ஒத்துழைப்பிற்காக ☞ 8

## ஐதேகவிடம் அடிபணிந்தது பொது ஜன பெரமுன கட்சி

### உதய கம்மன்பில இப்படி விமர்சனம்

சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பொது ஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடிபணிந்துள்ளதாக பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல் கோட்டயில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு ☞ 8

## ஆஸி. அமைச்சருடன் அலி சப்ரி நேற்று சந்திப்பு



ஆஸ்திரேலியஉதவி அயலுறவுத்துறை அமைச்சர் டிம் வொட்ஸைச் சந்தித்த இலங்கைஅயலுறவுத்து அமைச்சர் அமைச்சர் சப்ரி, ஆஸ்திரேலியா-இலங்கை ☞ 8

## இந்திய அயலுறவு அமைச்சர் கொழும்பை வந்தடைந்தார்

### இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23ஆவது அமைச்சர் மட்ட கூட்டம் இன்றுஆரம்பமாகவுள்ள நிலையில்அதில்பங்கேற் பதற்காகஇந்தியஅயலுற வுத்துறை அமைச்சர் கலாநிதி.சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேற்று மாலையில் இலங் கையை வந்தடைந் துள்ளார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் அவரை உயர்கல்வி அமைச்சர் கலாநிதி.சுரேன் ராகவன் நேரில் சென்று வரவேற்றிருந்ததோடு இலங்கைக்கான இந்தியஉயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் பங்கேற்றிருந்தார். ☞ 8

## தேசிய காணி ஆணைக்குழு உருவாக்க சட்டத்திற்கு அனுமதி

### அமைச்சரவை வழங்கியது

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக தேசிய காணி ஆணைக் குழுச்சட்டத்தினைதிருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகள் பற்றிய செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 13ஆவதுஅரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையின் 1ஆம் பட்டியலின் 11 வாசகத்திற்கு அமைவாக காணி ஆணைக்குழு அமைக் கப்படவுள்ளது. குறித்த பணிகளுக்காக ☞ 2

## நாட்டுக்காகவே ரணிலுடன் ஒன்றிணைந்தார்களாம்

### நாமல் தெரிவிப்பு

நாட்டுக்காகவே மாறுபட்ட அரசியல் கொள்கையை கொண் டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்துள்ளோமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற் றையதினம்அக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் பஸில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சின் பின்னர் ஊடகங் ☞ 8

## கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு பூர்த்தி

### சீனா அறிவிப்பு

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கி கடந்த மாதம்இணக்கப்பாட்டை எட்டியதாக சீன அயலு றவுத்துறைஅமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின்தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பைஅடுத்துபுளும் பேர்க் இணைதளம் வெளியிட்டுள்ள ☞ 8

## சீனா – இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

### அனுமதி வழங்கியது அமைச்சரவை

முதலீட்டுஊக்குவிப்பு அமைச்சுக்கும் சீன மக்கள் குடியரசின் தேசிய வளர்ச்சி மற் றும்சீர்திருத்தஆணைய கத்துக் குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந் தமொன்றை மேற் கொள்வதற்கு அமைச் சரவையின்அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

முதலீட்டுஊக்குவிப்பு அமைச்சுக்கும் சீன மக்கள் குடியரசின் தேசியவளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணைய கத்துக்குமிடையில் உற்பத்திதிறன் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இன்னமும் காலம் தேவையாக இருக்கும். ஏனெனில் கடும் குளிர்ப் பகுதி என்று வகைப்படுத்தப்படும் இடத்திலேயே அறிவியலாளர்கள் இந்த கார்பன் டை ஆக்சைட் வாயுவிற்கான அறிகுறிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். யூரோபாவின்குளிர்மண்டலங்களில், ஆராய்ச்சியாளர்கள் கார்பன் டை ஆக்சைடுஏராளமாகஇருப்பதையே கண்டறிந்தனர்.

ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் அவதானிப்புகள் யூரோபாவின் பனிக்கட்டி மேற்பரப்புக்கு அடியில் ஒரு கடலுக்குள்கார்பன், வாழ்க்கையின் கட்டுமானத் தொகுதி இருப்பதைக் குறிக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர். செப்டம்பர் 21, 2023 அன்று, 'சயின்ஸ்' இதழ் இந்த பனிக்கட்டி நிலவில் கார்பன் கண்டுபிடிக்கப்பட்டதை விவரிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க ஆய்வை வெளியிட்டது. சுயாதீன வானியலாளர்களின்இரண்டுகுழுக்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டன. ஆய்வின் கண்டுபிடிப்புகள் ஐரோப்பாவில் கார்பன் டை ஆக்சைடு ஏராளமாக இருப்பதை வலுவாக ஆதரிக்கின்றன, இது அங்குஉயிரினங்கள்இருப்பதற்கான சாத்தியங்களைஅதிகரித்திருக்கிறது. நிச்சயம் அங்கு ஏதாவது உயிரினங்கள் இருக்கக்கூடும் என்று அறிவியலாளர்கள் நம்புகிறார்கள்.

கார்பன் வாயு உயிருக்கு உகந்ததா அல்லது உயிர் வாழ்க்கையைத் தடுக்கிறதா என்பதை தீர்மானிப்பதற்கான திறவுகோலை யூரோபாவின் கடல் கொண்டுள்ளது என்று அவர்கள் கூ-றுகின்றனர்.

நமது சூரிய மண்டலத்தில் உயிர்கள் இருக்கலாம் என்று அறிவியலாளர்கள் ஏற்கனவே நம்பிய சில இடங்களில் ஒன்றாக யூரோபா தனித்து நிற்கிறது. அதன் தடிமனான பனிக்கட்டிக்கு அடியில் பூமியின் பெருங்கடல்களில் காணப்படும் இரண்டு மடங்கு தண்ணீரைக் கொண்ட ஒரு கடல் உள்ளது.

இருப்பினும், உயிர்கள் செழிக்க கார்பனின் இருப்பு மட்டும் போதாது என்பதை நாசா நமக்கு நினைவூட்டுகிறது; அதற்கு கரிம ஊட்டச்சத்துக்கள் மற்றும் கரிம மூலக்கூறுகளின் தொடர்ச்சியான விநியோகம் போன்ற ஆற்றல் ஆதாரம் தேவைப்படுகிறது. இருந்தாலும் இந்த அண்டப் பெருவெளியில் எங்காவது உயிரினங்கள்இருக்கலாம்என்கிற அறிவியலாளர்களின்நம்பிக்கையை இந்தக் கண்டுபிடிப்பு இன்னும் அதிகரித்திருக்கிறது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டத்தோ செரி திராஜா சம்ப்ரி அப்துல் காதிரைச் சந்தித்தவர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

ஜப்பான் அயலுறவுத்துறை துணை அமைச்சர் மசாஹிரோ கொமுராவுடனானசந்திப்பின்போது, இரு நாடு களின் நலனுக்காக இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து நாங்கள் விவாதித்துள்ளார்.

கொரியா அயலுறவுத்துறை அமைச்சின்அரசியல்விவகாரங்கள் துணை அமைச்சர் சுங் பியுங்-வோனுடன் புதுப்பிக்கப்பட்ட முன்முயற்சிகள் மூலம் பரஸ்பரம் பயனடையும் இலங்கை-தென் கொரியா இடையேயான நெருக்கமான இருதரப்பு பங்காளித்துவத்தை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இறுதியாக, ஐக்கிய அரபு இராஜ்ஜிய பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்கள் உதவி அமைச்சர் சயீத் முபாரக் அல் ஹஜெரியுடன் உஷ்ராயாடியபோது, எமது உறவுகளை மேலும் வலுப் படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விவாதித்தார். பிராந்தியத்தின் தற்போதைய முன்னேற்றங்கள் பற்றியஎங்கள்எண்ணங்களையும் நாங்கள் பகிர்ந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## பிரிட்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான இராஜாங்க அமைச்சர் அன்னே - மெரி டெவிலியன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் பொருளாதார மீட்சி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

உண்மைமற்றும்நல்லிணக்கம் தொடர்பிலான சட்டமூலம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம் மற்றும் புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டமூலம் உள்ளிட்ட சட்டவாக்க செயற்பாடுகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையில் தனியார் பல்கலைக்கழங்களை நிறுவுவதற்கான திட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சருக்கு தெளிவூட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய இராச்சியத்தின் பல்கலைக்கழகங்களும் இதனோடு இணைந்துகொள்ளுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மூன்றுநாட்கள்உத்தியோகபூர்வ பயணத்தினை மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்து பிரித்தானியாவின் இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியனை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் வரவேற்றதோடு கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார். இதன் போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்று பற்றிக்கும் கலந்துகொண்டார்.

பின்னர்வெளிவிவகாரஅமைச்சர் அலி சப்ரியைச் சந்தித்த அவர், பொருளாதா மீட்சிக்கான பதையில் இலங்கை முன்னெடுத்துவரும் செயற்பாடுகள், கடன் மறுசீரமைப்புக்கான முனைப்புக்கள், உண்மை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகள் இந்து சமுத்திரத்தில் வர்த்தகம், சக்திப் பரிமாற்றத்துக்கான திறந்த மற்றும் சுயாதீனத் தன்மையை பேணுதல், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முனைப்புக்கள், உலக வங்கியின் உதவித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக பரந்துபட்ட அளவில் கலந்துரையாடியதாக அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியன் குறிப்பிட்டுள்ளார்.

அதனையடுத்துநாளையதினம் வடக்குக்கான விஜயத்தினை மேற்கொள்ளும் அவர் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் வர்த்தகத் தலைவர்களை சந்திக்கவுள்ளார்.

மேலும், ஐக்கிய இராச்சியத்தின் மோதல், பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாட்டுநிதியத்தின்ஆதரவுடன் முகமாலையில்முன்னெடுக்கப்படும் கண்ணிவெடிஅகற்றும்தளத்திற்கும் அவர் சென்று பார்வையிடுகின்றார்.

## ஜப்பானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிசுகோஷிஹிதேகிஆகியோருடன் ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ் சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்றத்தின் உப அமைச்சர் கொமுரா மசாஹிரோ பொருளாதார நெருக்கடிகளின் போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முடிந்தமையையிட்டு மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார். நீண்டகால நட்பு நாடு என்ற வகையில் தொடர்ந்தும் இலங்கையுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஜப்பான்அரசுக்குநன்றிதெரிவித்தார்.

அதற்கமைய நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும், பாடசாலை உணவு வழங்கல் திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம் என்ற வகையில் விசேட வேலைத் திட்டங்களாகமுன்னெடுக்கஎதிர்பார்த் திருப்பதாகவும் தெரிவித்தார்.

70 வருடங்களுக்கு முன்பாக இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்குஜப்பான்வழங்கிவரும் 10 மில்லியன் பெறுமதியான உணவு பொருட்கள் அன்பளிப்பு இம்முறையும்வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடுமை யான பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மட்டுப்படுத்துவதற்கானதிட்டத்தின்கீழ்(145,000) பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் சமரதுங்க சுட்டிக்காட்டினார்.

இதுவரையில்ஜப்பான்அரசினால் இலங்கை மக்களுக்காக 7,270 மெற்றிக்டொன் உணவுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன் கீழ் பாடசாலைகளுக்காக சிவப்பு பருப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, (960,000) பாடசாலை மாணவர்கள் அதனால் பயனடைவர் என்றும் சுட்டிக்காட்டினார்.

## தேசிய காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்ட மூலத்தின் அடிப்படையில் சட்டமூலமொன்றைதயாரிக்குமாறு, சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சுற்றுலாத்துறை மற்றும்காணிஅமைச்சர்சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முன்னதாக, தமிழ்ப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அமைவாகதேசியகாணிஆணைக் குழுச் சட்டத்தினை திருத்தவுள்ளதாகவும் அதன் பின்னர் காணி அதிகாரங்கள் பற்றிய விடயத்தினை இலகுவாக கையாள முடியும் என்று தெரிவித்திருந்தார்.

## சீனா - ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்என்றவகையில்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இந்து சமுத்திரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள வலய அமைப்புகள் மற்றும் முன்னெடுப்புக்களுடனும் கைகோர்த்துச் செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அதற்காக இந்து சமுத்திரத்திர வலயத்தின் அனைத்து பங்குதாரர்களும் சாதகமான கலந்துரையாடல் ஒன்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

ரத்மலான ஈகல்ஸ் லேக்சைட் அரங்கத்தில் நேற்று நடைபெற்ற 'கொழும்பு வான்வெளி கலந்துரையாடல் 2023' நிகழ்வில் பிரதமஅதியாககலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கைவிமானப்படையினால் 06 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். 2015- 2016 களில் 'சமுத்திர வான்வெளி பாதுகாப்பினூடாக தேசத்தை கட்டியெழுப்புதல்' என்ற தொனிபொருளின் கீழ் இந்நிகழ்வு முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை யுத்த நிலைமையிலிருந்து விடுபட்ட அல்லது யுத்தத்தின் இறுதி காலக்கட்டத்தில் இந்நாட்டின் வான்வெளி எல்லையில் பல்வேறு அத்துமீறல்கள் இடம்பெற்றன. அதனால் அக்காலத்தில் வான்வெளி பாதுகாப்பு என்ற விடயம் காலோசிதமான பேசுபொருளாக மாறியிருந்தது.

இந்துசமுத்திரவலயம்கடல்வர்த்தக செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பு, மூலோபாயம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூக ரீதியில் உலக தொடர்பாடல்களுக்கு மாற்றமடைந்துள்ள தருணத்தில், இந்து சமுத்திரத்தின் ஒத்துழைப்பு தேவையைமேம்படுத்தும்வகையில் இம்முறை தொனிப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலயத்தின் இருப்பு மற்றும்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# ஜனாதிபதித் தேர்தலினை பிற்போடும் எண்ணமில்லை

## விஜயமான்ன எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதிதேர்தலைபிற்போடும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. அத்துடன் தம்மிக்க பெரேரா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவது ஒருபோதும் ரணில் விக்ரமசிங்கவுக்கு சவாலாக அமையப்போவதில்லையென ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்லக்ஷ்மன் விஜயமான்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிக்கையிலேயேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு ஆளும் தரப்பு திட்டமிட்டு வருவதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். அவ்வாறான எந்த எண்ணமும் ஆளும்தரப்புக்கோ ஜனாதிபதிக்கோ இல்லை. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடமே இடம்பெற இருக்கிறது. அதனால் உரிய காலத்தில் தேர்தல் இடம்பெறும்.

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி எவ்வாறு தயாராகப்போகிறது. அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக கடைசியாக இடம்பெற்ற கட்சியின் செயற்குழுவின் போது நாங்கள் அது தொடர்பாக கலந்துரையாடி இருந்தாலும். அதனால் எதிர்க்கட்சிகள் தங்களின் பிரசாரத்துக்காக, எந்த அடிப்படையும் இல்லாத விடயங்களை தெரிவித்து மக்களை குழப்பி வருகின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி, ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு ஆட்சியாளர்கள்திட்டமிட்டுவருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான எந்த யோசனையும் தெரிவிக்கப்படவில்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருக்கின்றபடியாலே ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கு நாட்டை கட்டியெழுப்புவதற்கான தீர்மானங்களை விரைவாக முன்னெடுக்க முடியுமாகி இருக்கிறது. அதனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தற்போதைக்கு இல்லாமலாக்க எந்த திட்டமும் இல்லை. ஆனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும். அதனால் எதிர்காலத்தில் அனைவருடனும் கலந்துரையாடி இது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளலாம்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக தம்மிக்க பெரேரா தெரிவித்திருக்கிறார். அது அவருடைய உரிமை. அவரைப்போன்று ஜனாதிபதியாக கனவு காண்பவர்கள் பலரும் இருக்கின்றனர்.

என்றாலும் வங்குராதே;து அடைந்திருந்த நாட்டை மீட்பதற்கு யாரும் முன்வராத நிலையில் இந்த நாட்டை மீண்டும் ஸ்திரமான நிலைக்கு கொண்டுவர யார் நடவடிக்கை எடுத்தார் என்பது மக்களுக்கு தெரியும். அதனால் தமிக்க பெரேராவோ அல்லது வேறு யாராக இருந்தாலும் அடுத்த ஜனாதிபதிதேர்தலில்யாரும்சவாலாக இருக்கப்போவதில்லை என்றார்.

# மலேசியா ஆதரவு

பிராந்தியவிரிவானபொருளாதார பங்காண்மையில் இணையும் இலங்கையின் கோரிக்கைக்கு மலேசியா ஆதரவளிக்கும் என்று மலேசிய வெளிவிவகார அமைச்சர் டத்தோ செரி திராஜா சம்ப்ரி அப்துல் காதிர் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும்மலேசியவெளிவிவகார அமைச்சருக்கும் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

பிராந்தியவிரிவானபொருளாதார பங்காண்மையில்இலங்கையின் பிரவேசம்பரந்ததென்கிழக்குஆசிய பிராந்தியத்தில் அதன் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என்று பிரதமர் தெரிவித்தார். 'இலங்கை எங்கள் பிராந்தியத்திற்கு சொந்தமானது' என்று குறிப்பிட்ட மலேசிய அமைச்சர் அதற்கு இலங்கைக்கு முழு ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்தப் பொருளாதார தொலை நோக்குப் பார்வையின் முன்னேற்றத்திற்கு முழு ஆதரவையும் அளிப்பதாக அறிவித்த பிரதமர், இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் எதிர்கால தொலை நோக்குப் பார்வையுடன் இது இணைந்திருக்கும் என்பதையும் உறுதிப்படுத்தினார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்து சமுத்திர பிராந்திய சங்கம் போன்ற பிராந்திய குழுக்களின் ஒத்துழைப்பில் விசேட கவனம் செலுத்தி இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. இலங்கையில் வளர்ந்து வரும் சுற்றுலா, கல்வி மற்றும் மருந்துத் தொழில் துறைகளில் முதலீடு செய்ய முன்வருமாறு மலேசிய தொழில்முயற்சியாளர்களுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார். அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் 6ஆவது மிக உயர்ந்த முதலீட்டு பங்காளியாக மலேசியா உள்ளது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது மலேசிய அரசாங்கம் அளித்த ஆதரவிற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். இலங்கையுடனான உயர்மட்ட உறவுகள், வரலாற்று உறவுகள், மனித உறவுகள் மற்றும் ஆழமான நட்புறவைக் குறிப்பிட்ட மலேசிய அமைச்சர், பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை அதிகரிக்க தமது அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

மலேசியத் தூதுக்குழுவின் உதவிச் செயலாளர்கள் டத்தோ சையத் மொஹமட் பக்ரி சையத் அப்துல் ரஹ்மான் மற்றும் அஹமட் கம்ரிஸாமில்ரெசா, உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம், இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்றஉறுப்பினர்யதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுரா திஸாநாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சீன ஆராய்ச்சி கப்பல் நவம்பரில் இலங்கை வருவதற்கு அனுமதி!

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தகவல்



சீன கப்பல் நவம்பர் மாதத்திலேயே இலங்கைக்கு வருகைதருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் இதனைத் தெரிவித்துள்ள அவர், சீனகப்பல் இலங்கை துறைமுகத்திற்கு வருவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளதுஎனினும்கப்பல் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு வரமுடியாது. ஆனால் நவம்பர் மாதத்திலேயே சீன கப்பல் இலங்கை வரமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

சீன கப்பல் நவம்பர் மாதத்திலேயே இலங்கை வரமுடியும் என்பது குறித்து அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இது வெறுமனே ஒரு விஜயம் மாத்திரம் இல்லை. கப்பல் இலங்கையில் தரித்துநிற்கும் நாள்களில் அதற்கான அனைத்து வசதிகளையும் இலங்கை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், உள்விவகாரங்களை கருத்தில் கொண்ட பின்னர் கப்பல் இலங்கை துறைமுகத்திற்கு வருவதற்கான திகதியை வழங்கியுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு சீனாவுடனான இருதரப்பு உறவுகள் மிகவும் அவசியமானவை என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (05)

# நில்வளா கங்கை தொடர்பில் கவனம் அமைச்சர் ஜீவன் தலைமையில் கூட்டம்





மாத்தறை நில்வளா கங்கையில் தடுப்பணையில் உள்ள ஒரு பகுதியை மாற்றுவதற்கும் கிளை ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியிலான தீர்வை காண்பதற்கான விசேட கூட்டம் ஒன்று திங்கட்கிழமை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் மாத்தறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், நில்வளா கங்கையில் அமையப்பெற்றுள்ள தடுப்பணையால் தான் இந்த நிலைமை என மக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வறட்சி காலத்தில் கடல் நீர் ஆற்றுடன் வந்துகலக்காமல் இருப்பதற்காகவும், சுத்தமான குடிநீர் பெறும் நோக்கிலும் தான் இந்த தடுப்பணை அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

இந்தக் கூட்டத்தின் போது வெள்ள அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

இவ்வேளையிலேயே அந்த தடுப்பணையில் ஒரு பகுதியை மாற்றுவதற்கும் அந்த ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளர்களின் மேற்பார்வையின் மூலம், இராணுவம் மற்றும் கடற்படையில் உள்ள அதிகாரிகளின் உதவியுடன் இந்த ஆரம்பக்கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதேபோல எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருப்பதற்காக எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் நீர்வழங்கல் அமைச்சும், நீர்ப்பாசனத்துறை அமைச்சும் இணைந்து ஒரு கூட்டு அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்கவும் கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் அமைச்சருடன், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நீர்ப்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிபுண ரணவக்க, புத்திக பத்திரண, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், நீர்ப்பாசனத்துறை அமைச்சின் அதிகாரிகள், மாத்தறை மாவட்ட செயலாளர் உட்பட அதிகாரிகள், பொறியியலாளர்கள் என முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.(05)

# மான் கறி தயாரித்த 17 வயது சிறுமி கைது!

விலானகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் அலவத்துகொட பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மான் கறி தயாரித்துக்கொண்டிருந்த 17 வயதுடைய சிறுமி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விலானகம பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் மான் ஒன்று கொல்லப்பட்டுள்ளதாகவும், குறித்த வீட்டில் மான் கறி மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் வழங்கிய இரகசிய தகவலின் பேரில் பொலிஸார் இந்த சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த நபர் கண்டி நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பின்னர், நீதிவான் நீதி மன்றத்தில் மான் கறியை அழிக்க உத்தரவிடப்பட்டது. (05)





# மாணவருக்கு இலவச மதிய உணவுத் திட்டம்

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

2023 ஆண்டளவில் பாடசாலை சீருடைகள் மற்றும் மதிய உணவுகள் போன்ற மாணவர்களுக்கான சலுகைகள் முறையாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2030ஆம் ஆண்டளவில், அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு வழங்கப்படும் என்றும் அதற்கான ஏற்பாடுகளை செய்வது தொடர்பான ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருவதோடு பிரான்ஸ் அரசாங்கத்துடனும் தொடர்புடைய கட்சிகளுடனும் இது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவற்றுக்கு மத்தியில் குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளை இடையூறு இன்றி பேணுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்திய அமைச்சர், நிலையான கல்வித் திட்டத்தைத் தொடர அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



பாடசாலைகளில் அதிபர்கள் பற்றாக்குறையைத் தவிர்க்கும் வகையில் 4718 அதிபர் நியமனங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் மேலும் தெரிவிக்கின்றார்.

ஆசிரியர் கல்வி சேவையில் 705 வெற்றிடங்களும், கல்வி நிர்வாக சேவையில் 405 வெற்றிடங்களும் நிரப்புவதன் மூலம் ஆசிரியர் ஆலோசகர் சேவையில் உள்ள முரண்பாடுகளைக் களைந்து அந்த சேவை தொடர்பான வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். கட்டமைப்பு மாற் றங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். - என்றார். (05)





# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகருக்கு கௌரவம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த ஒருவருடகாலமாக சேவையாற்றி உயர் கல்வி கற்பதற்காக (வைத்திய நிபுணர் - நிர்வாகம்) வைத்தியசாலையை விட்டுச்செல்லும் வைத்தியர் எம்.எம்.றெமான்ஸ்'க்கு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் வாழ்த்துக்களும், பாராட்டும் கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நல்புரிச்சங்கச் செயலாளர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில், புதிய வைத்திய அத்தியட்சகராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றிருக்கும் வைத்தியர் தேவநேசன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார்.

கடந்த ஒருவருட காலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் றெமான்ஸ் கடமையாற்றினாலும் திட்டமிடல் பிரிவு, தரநிர்ணய பிரிவு என இரு பிரிவுகளை உருவாக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடன்பொறி அரசியல்

**ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றிருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியா சீனா அமெரிக்கா ஆகிய நாடுகளின் அழுத்தங்கள் பழகிப் போய்விட்டன என்று கருத்துத் தெரிவித்திருந்தார். இலங்கை நீண்ட காலமாகவே கிழக்கு மேற்கு மற்றும் இந்தியா இடையிலான காய் நகர்த்தல்கள் மூலம் தனது நலன்களை அடைய முடியும் என்று நம்பிச் செயற்பட்டு வருகின்றது. இருப்பினும் இலங்கையைவிட அளவிலும் அறிவிலும் பெரியவையான இந்த நாடுகள் இலங்கையைப் பயன்படுத்திக்கொள்வதைத் தவிர்க்க முடியாது என்றும் தோன்றுகின்றது.**

**சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது, வளர்ந்து வரும் நாடுகளின் கொள்ளளவுக்கு அதிகமாகக் கடன்களை வழங்கி அவற்றைக் கடனாளிகளாக்கும் வகையில்தான் சீனா செயற்படுகின்றது என்றும் மேற்குலகம் முன்வைக்கும் விமர்சனங்களை இலங்கை நிராகரித்தாலும் அதுதான் உண்மை என்பதை இரு சம்பவங்கள் நிரூபித்துள்ளன.**

**இலங்கையின் கடன்மறுசீரமைப்பில் சீனா மிக முக்கிய பங்காளி. இந்த மாதத்திற்குள் கடன்மறுசீரமைப்புப் பணிகளை முடிக்க முடியும் என்று அரசுத் தலைவர் முன்னர் நம்பியிருந்தார். அது பற்றிப் பல தடவைகள் உரையாற்றியுமிருக்கிறார். ஆனால், அவரது எதிர்பார்ப்புக்கு ஏற்ப காரியங்கள் நடக்கவில்லை. சீனா தனது மறுசீரமைப்புத் திட்டத்தை அறிவிக்காமல் இழுத்தடித்து வந்தது. இதனால் பாரிஸ் கிளப், ஜப்பான், இந்தியா போன்ற இலங்கையின் மற்றைய கடன் வழங்குநர்களும் தமது திட்டத்தை அறிவிக்காமல் இருந்தனர்.**

**இதற்கிடையில் சீனாவின் கடல் ஆய்வுக் கப்பலான ஷியான் 6 கடலடி ஆய்வுக் கப்பலின் இலங்கை வருகை சர்ச்சையைக் கிளப்பியது. அதன் வருகைக்கு இந்தியா மற்றும் அமெரிக்காவிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. இதையடுத்து இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி அறிவித்தார். இருந்தாலும் அழுத்தங்களைச் சமாளிக்க ஐப்பசியில் வர இருந்த அந்தக் கப்பலை கார்த்திகையில் வருமாறு இலங்கை கோரியது.**

**இப்போது கார்த்திகை மாதம் அந்தக் கப்பல் இலங்கைக்குவருவதற்குஅனுமதிவழங்கப்பட்டிருப்பதாக அயலுறவுத்துறை அமைச்சர் அறிவித்திருக்கிறார். இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று சீனாவில் அறிவிக்கப்பட்ட நிலையில் – செய்தி வெளியாகிய நிலையில் – கப்பலுக்கான அனுமதி தொடர்பிலான அமைச்சிரின் அறிவிப்பும் வெளியாகி இருக்கின்றது. இவையிரண்டும் தற்செயலாக ஒரே நேரத்தில் நடந்தவை என்று சொல்ல முடியாது.**

**சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை சிக்கிக் கொண்டிருக்கின்றதுஎன்பதற்குஇதுநல்லஉதாரணமாக இருக்கக்கூடும். கடன்மறுசீரமைப்பும்கப்பலின்வருகையும் பேரம் பேசல் மேடையில் முன்வைக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது. வழங்கப்பட்ட கடனைப் பொறியாக வைத்து சீனா தன் காரியங்களைச் சாதித்துக்கொள்கிறது என்பதற்கு இதையொரு வெளிப்படையான உதாரணமாகக் கொள்ளமுடியும்.**

**இந்த மாத நடுப்பகுதியில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குச் செல்கின்றார். அப்போது இந்தக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இறுதியான முடிவுகள் எட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சீனாவிடமிருந்துதான் வாங்கிய கடன்களில் குறைந்தது 10 சதவீதமானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று இலங்கை எதிர்பார்க்கின்றது. அப்படிச் செய்தால்தான் பொருளாதார மீட்சி இலங்கையில் சாத்தியமாகும். இலங்கையைப் பிணையெடுக்க பன்னாட்டு நாணய நிதியமும் தொடர்ந்து உதவும்.**

**இந்த நிலையில் பொறிக்குள் சிக்கிக்கொண்டுள்ள இலங்கை இன்னும் என்னவெல்லாவற்றையும் இழக்கப் போகின்றது என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.**

# இலங்கை யானைகளுக்கும் கொலைக்களம்

இலங்கையில் யானைகள் கொல்லப்படுவது அபாயகரமான கட்டத்தை தொட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் 36 மணி நேரத்தில் 11 யானைகள் இறந்த. செப்டெம்பர் 27 அன்று, இரண்டு வெவ்வேறு தொடருந்துகள் மோதி ஆறு யானைகள் அநியாயமாக இறந்தன.- கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த இரவு அஞ்சல் தொடருந்து மோதி நான்கு யானைகள் இறந்தன, மட்டக்களப்பில் இருந்து மீனகயா தொடருந்து மோதி ஒரு குட்டி உடனேயே இறந்தது. மற்றொரு பெண் யானை காயமடைந்துகிடந்துபின்னர் இறந்தது. கொழும்புக்கு. யானைகள் கொல்லப்படும் இந்த வேகம் கடுமையான கவலையை ஏற்படுத்தினாலும், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கொள்கையளவில் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதே பெரும் சோகம்.

### ஆபத்தான புள்ளிவிவரங்கள்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் தரவுகளின்படி, 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 100 யானைகள் இறந்துள்ளன. இவற்றில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள், சட்டவிரோத மின்சாரம் மற்றும் யானை வெடிகள் ஆகியவற்றால் 67 யானைகள் உயிரிழந்துள்ளன.


இந்த ஆண்டு ஜூலை மாதம் வரை மட்டுமே 238 யானைகள் கொல்லப்பட்டுள்ளன. இவற்றில் பல யானைகள் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளதாகவும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவிக்கின்றார்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் அனுராதபுரத்தில் மட்டும் 34 யானைகள் இறந்துள்ளன. மனித -யானை மோதலின் மோசமான வளர்ச்சியால் மனிதர்களும் பலர் கொல்லப் படுகின்றார்கள். ஆனால், எண்ணிக்கைப் புள்ளிவிவர ஒப்பீட்டின்படி யானைகளின் உயிரிழப்பு வீதம் மனிதர்களின் இழப்பைவிடப் பலப் பல மடங்கு அதிகம். யானை வழித்தடங்கள் மற்றும் பிற சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகளில் மனிர்கள் வீடுகளைக் கட்டுகிறார்கள். தங்களுக்காக அவற்றை அபிவிருத்தி செய்கி றார்கள். இத்தகைய மனித அத்துமீறல் யானைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் யானைகள் பாதுகாக்கப்பட்ட விலங்காக இருந்தாலும், யானைகளை வேட்டையாடுவோர் பிடிக்கப்படுவது மிக மிக அரிது.

### காலத்தின் அவசரத் தேவை

யானை – தொடருந்து மோதல்களைத் தணிப்பதற்கான உடனடி அணுகுமுறைகளில் ஒன்று, பயணத்தின் போது மனிதனா அல்லது மிருகமா என்பதைப் பொருட்படுத்தாமல், ஒரு உயிரைக் காப்பாற்றுவதன் முக்கியத்துவத்தை இயந்திர ஓட்டுநர்களுக்கு உணர்த்துவதாகும். தொடருந்துத் திணைக்களம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் (DWC) ஆகியன கடந்த காலங்களில் சில கூட்டு நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், இலங்கையின் காடுகளில் மீதமுள்ள யானைகளை காப்பாற்ற இன்னும் புதுமையான அணுகுமுறைகளை உருவாக்க வேண்டியிருக்கிறது. அதுவும் அவசரமாக உருவாக்கவேண்டியிருக்கிறது.

தொடருந்து இயந்திர ஓட்டுனர்களுக்கு யானைகளின் உயிர் குறித்த உணர்திறனை -இரக்கத்தை - ஏற்படுத்துதலின் முக்கியத்துவத்தை உணர்த்துதலும் யானைகள் அதிகம் நடமாடும் இடங்கள் பற்றிய அறிவைப் புகட்டுவதும் மிக அவசியம் பிரபல யானை ஆய்வாளரும்,



வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி சுமித் பிலப்பிட்டிய. அவர் சொல்வதின்படி பார்க்கும்போது தொடருந்தின் வேகத்திற்கும் விபத்துக்களைத் தடுப்பதற்கும் இடையில் கடுமையான ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுவதும் அதற்கேற்ப வேகக் கட்டுப்பாடுகளை அறிமுகப் படுத்துவதும் தேவையாக இருக்கும்.

யானை வழித்தடங்களை மட்டும் பார்ப்பதற்குப் பதிலாக யானைகள் நடமாடும் இடங்களின் வரம்புகளை வரையறுப்பதும் முக்கியமானது. அது பற்றிய விவாதங்களும் உள்ளன. யானை இறப்பைத் தடுக்க இது ஒரு சிறந்த அணுகுமுறையாக இருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

இலங்கையில் யானைகள் நடமாடும் பகுதுகளுக்கு வரம்புகள் உள்ளன. 'ரேடியோகொலரிங்' தரவுகளின் அடிப்படையில், இலங்கையில் யானைகள் நீண்ட தூரம் இடம்பெயர்வதில்லை. ஆனால் அவை தங்கள் பகுதிக்குள் சுதந்திரமாக நடமாடுகின்றன. அதற்கு அனுமதிக்கப்படவேண்டும். அவற்றின் எல்லைக்குள் அவை நகரும் பாதைகள் மற்றும் இணைப்புக்கள் உறுதி செய்யப்படவேண்டும். எனவே அவற்றின் இருப்பிட எல்லைகளைப் பாதுகாப்பது மற்றும் இருப்பிடங்களுக்கு இடையில் அவற்றுக்கான இணைப்பை உறுதிப்படுத்துவது என்பன மிக முக்கியமானவை.

இதிலுள்ள சிக்க என்னவென்றால் ஒரு தொடருந்துப் பாதையின் இரு புறங்களிலும் அவற்றின் இருப்பிட எல்லைகள் விரிந்திருக்கலாம். அவ்வாறு இருந்தால் அவை தொடருந்துப் பாதையைக் கடந்து செல்வது கட்டாயம் நடக்கும். அந்த இடங்களில் விபத்துக்களுக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும். இந்த இடங்களை அடையாளப்படுத்தி விபத்துக்களைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கண்டறிவது அதிகாரிகளின் மிக முக்கிய கடமை. கொள்கை வகுப்பாளர்களின் அவசியத் தேவை. ஆனால் அப்படி நடப்பதைக் காணமுடியவில்லை.

யானைகள் மற்றும் புகையிரத மோதல்களின் அதிகரிப்புக்கு பதிலளிக்கும் வகையில், இலங்கை தொடருந்துத் திணைக்களப் பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ். குணசிங்க, வன வளத் திணைக்களம் மற்றும் பிரதேச மக்களின் ஒத்துழைப்பு இந்த விடயத்தில் மிக அவசியம் என்கிறார்.

பல்வேறு வகையான தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமையான அணுகுமுறைகளை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் இந்த முயற்சிகள் செயற் படுத்தப்படவில்லை, என்று குணசிங்க தெரிவித்தார்.

யானைகளின் நடமாட்டப்பகுதிகளில் விபத்துச் சூழ்நிலைகளை எதிர்கொள்ள இயந்திரசாரதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும், தொடருந்து இயக்கத்திற்கும் யானைகளின் நடத்தைக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். வழக்கமான கால அட்டவணையில் இருந்து ஒரு தொடருந்து விலகிச் சென்றால் யானைகள் தொடருந்து மீது மோதவாய்ப்புகள் அதிகம். ஆனால் இது குறித்து இன்னும் தீவிரமாக ஆராயப்படவேண்டியிருக்கிறது என்று அவர் வலியுறுத்தினார்.

தொடருந்துத் தண்டவாளத்தின் இருபுறமும் 30 மீற்றர் வரை புதர்களை அகற்றுதல், யானைகள் கடக்கும் இடங்களில் சமிக்ஞைகளை நிறுவுதல், தொடருந்துகளுக்கான வேக வரம்புகளை அமல்படுத்துதல், யானைகள் கடப்பதற்கு மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைத்தல், யானைகள் கடக்கும் இடங்களில் உள்ள தடைகளை அகற்றுதல் போன்ற பல அணுகுமுறைகள் குறித்துப் பல ஆண்டுகளாக ஆராயப்படுகின்றன. ஆனால், செயற்படுத்தப்படவில்லை. அதிக அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவதைவிட, இத்தகைய அணுகுமுறைகளை மேலும் பலப்படுத்தப்படவேண்டும் என்று வனவளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரியபண்டார தெரி வித்தார்.

தொடருந்து ஓட்டுனர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளோம். வடக்கு ரயில் பாதைமுற்றாகபுனரமைக்கப்பட்டது ஆனால் அதற்கு முன்னர், குருநாகலில் இருந்து ஒவ்வொரு அரைகிமீதூரத்திற்குமான நியமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொடருந்து திணைக்கள அதிகாரிகள் வழித் தடங்களை யொட்டியுள்ள எல்லாவற்றையும் அகற்றி, பாதைகளைப பராமரிக்கின்றனர். இந்தவிடயத்தில் எமது முக்கிய பணியாக இருப்பது அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு இது தொடர்பான அறிவைப் புகட்டுவதாகவே இருக்கின்றது" என்றார் சூரிய பண்டார.

இந்த அணுகுமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவையான நிதி குறித்து சூரிய பண்டாரவிடம் கேட்டபோது, திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இந்தப் பணிகள் இடம்பெறுவதாகவும் இதற்கெனத் தனியாக நிதி ஒதுக்கீடுகள் எதுவும் கிடையாது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில், யானைகள் – தொடருந்து மோதலைக் குறைக்க அதிகாரிகள் என்ன செய்வார்கள் என்பதை உன்னிப்பாகக் கண்காணித்துக்கொண்டு அழுவதுதான் மக்களுக்குமிச்சமாகஇருக்கின்றது.

இந்த அச்சுறுத்தல் பின்னணியில்தான், சமீபத்தில் வன விலங்கு அதிகாரிகளால் சுடப் பட்ட யானைசீதாபோன்றயானைகளும், உயிருக்குப் போராடுகின்றன.

இலங்கையின் காடுகளுக்குள் அடையாளம் தெரியாத பல யானைகள் உள்ளன, அவை மிருகத்தனமான மனிதர்களின் நடத்தைகளால் வீங்கிய காயங்கள் மற்றும் நுனி துண்டிக்கப்பட்ட தும்பிக்கைகளுடன் உலாவுகின்றன. அவற்றில் சில குருடர்களாக உள்ளன. சில காது கேளாதவை. அவற்றின் இருப்பிடத்தில் சாவுகள் மட்டுமே அவற்றை வதைக்கின்றன என்று சொல்லிவிடமுடியாது. அதற்கு மேலாகவும் அவற்றைத் துன்பங்கள் சூழ்ந்துள்ளன.

2022 ஆம் ஆண்டில் 400 க்கும் மேற்பட்ட யானைகள் கொல்லப்பட்டன, 140 க்கும் மேற்பட்ட மக்கள் யானை மனித மோதலின் ஒரு பகுதியாக காயமடைந்தன. இந்த புள்ளிவிவரங்கள் இலங்கையைஒரேதடவையில்அதிகஎண்ணிக்கையிலானயானைகள் இறந்த ஒரே நாடாகத் தரம் உயர்த்தியுள்ளன. இலங்கையில் யானைகளின் எதிர்காலம் நிச்சயமாக இருண்டதாகவே உள்ளது.

(5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை யானைகளுக்கும்.......



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**தொடருந்துத் தண்டவாளத்தில் யானைகள் இறப்பது அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன?**

இந்தஆண்டுகடும்வறட்சிநிலவியது. இதுபோன்ற சமயங்களில், யானைகள் உணவு மற்றும் தண்ணீரைத் தேடி வழக்கமாக நடமாடுவதைவிட அதி க ாக நடமாடுகின்றன.

அவற்றின் அதிகரித்த நடமாட்டம் மனிதர்களுடனும், அவர்கள் கடக்க வேண்டிய தொடருந்துப் பாதைகள் போன்ற மனித உட்கட்டமைப்புகளுட னும் அதிகம் தொடர்பு கொள்கிறது. இது குறித்து தொடருந்துத் திணைக்களம் தனது சாரதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

யானைகள் கடக்கும் அபாயம் குறித்தும் அவற்றைப் பாதுகாக்கும் வகையில் தொடருந்துகளைச் செலுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் அவர்களுக்குப் புகட்டுதல் வேண்டும். இயந்தி ஓட்டுநர்களுக்கு இதைப் பற்றி அதிக அறிவு இருந்தால், அவர்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள் மற்றும் யானை - ரயில் மோதல்களைக் குறைக்க முடியும்.

**இத்தகைய அதிக உணர்திறன் வாய்ந்த பகுதி களில் வேக வரம்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா?**

ஆம், அடிக்கடி யானைகள் கடக்கும் பகுதிகளில் வேகக் கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, வேக வரம்புகளைக் கடைப்பிடிப்பது வெகு குறைவு, ஏனெனில் தொடருந்துகளின் வேகத்தை யாரும் கண்காணிப்பதில்லை என்கிறார் பிலப்பிட்டிய.

இலங்கை தொடருந்துகளின் முன்னாள் ஓட்டுவர் ஒருவரிடம் பேசியபோது, தொடருந்து மணிக்கு 40 கிமீ வேகத்தில் சென்று யானையை இடித்தால், யானை தொடருந்துக்கு அடியில் சிக்குகிறது,

அதே சமயம் தொடருந்தின் வேகம் மணிக்கு 50 கி.மீக்கு மேல் இருந்தால், யானை முன்னோக்கி வீசப்படுகிறது. அல்லது விபத்தின் தாக்கத்தின் விளைவாக பக்கவாட்டாக தூக்கியெறியப்படுகின்றது.

இந்தப் பிரச்சினையைத் தணிக்க தொடருந்து மற்றும் வனவிலங்குத் துறைகள் இணைந்து செயல்பட வேண்டாமா?

ஆம், தொடருந்து - யானை விபத்துகளைக் குறைக்க வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இலங்கைத் தொடருந்துத் திணைக்களம் ஆகிய இரண்டும் இணைந்து செயல் படவேண்டும். தொடருந்து இயந்திர ஓட்டுநர்களிடம் விழிப்புணர்வு ஏற்ப டுத்தப்படுவதும் அவசியம்.

தண்டவாளத்தின் இருபுறமும் 10 மீற்றர்பகுதிதொடருந்துத்திணைக்களத்திற்குச் சொந்தமானது. இந்த இடத்தில் உள்ள தாவரங்கள் அகற்றப்பட்டால், இயந்திர ஓட்டுனர்கள் யானைகளைப் பார்க்க முடியும். அதுபோன்றே யானைகளாலும் தொடருந்து வருதைப் பார்க்க முடியுமாக இருக்கக்கூடும். உடனடியாக முயற்சிக்கக்கூடிய எளிய நடவடிக்கை இது.

மூலம்: டெய்லி மிரர்

# சுயாதீன உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்ட ஆலோசனை

## ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன தெரிவிப்பு



அமைச்சர் நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு பொதுஜன பெரமுனவின் கட்சி கொள்கைக்குஎதிராகசெயற்பட்டு சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கைஎடுப்பதற்கு சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில்உள்ளபொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்காமல் நாட்டு மக்களின் சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கியதால் பொருளாதார பாதிப்பு தீவிமடைந்தது. பொருளாதாரப் பாதிப்பை ஒரு தரப்பினர்அரசியல்நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள்.

நாடு தற்போது சமூக மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதற்கு ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக்கொண்டுஇடம்பெற்ற அரகலயவே பொறுப்புக் கூற வேண்டும். போராட்டத்தின் காரணமாகவே நாடாளுமன்றத்தில் ஒன்றை ஆசனத்தில் இருந்தவர் ஜனாதிபதியாகினார்.

பூகோள பாதிப்புக்கு மத்தியில் யார் மக்களை பாதுகாத்தார்கள், நெருக்கடியான சூழ்நிலையையார்தமதுகுறுகிய அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர்நீதிமன்றம்முன்மாதிரியான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு முரணாக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரியுள்ளோம். வெகுவிரைவில் உரியநடவடிக்கைஎடுக்கப்படும்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா குறிப்பிட்டுள்ளார். இது அவரது தனிப்பட்ட தீர்மானமே தவிர கட்சியின் தீர்மானமல்ல, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பரந்துபட்ட பேச்சில் ஈடுபட்டுள்ளோம். - என்றார். (05)

# மாத்தறை மற்றும் காலியில் பாடசாலைகள் இன்று திறப்பு

*நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று (புதன்கிழமை) மீண்டும் திறக்கப்படும் என தென் மாகாண கல்விவலய செயலாளர் தெரிவித்துள்ளார்.*

*சீரற்ற காலநிலை காரணமாக சில மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய இரண்டு நாள்களுக்கு மூடப்பட்டிருந்தன.*

*இதன் போது, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்து ஏனைய பாடசாலைகள் மாத்திரம் இன்று வழமைபோல திறக்கப்படவுள்ளது.*

*(05)*


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rorty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி குறித்த விசாரணைகள் ஆரம்பம்

## யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி தொடர்பிலான விசாரணை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் முன்னெடுக்கப்படுவதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கடற்தொழில் அமைச்சர் தலைமையில், அண்மையில் இடம்பெற்ற சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலான கூட்டத்தின் போது பருத்தித் துறையில் பொலிஸ் உயர் அதி காரி ஒருவர் வடமராட்சி கிழக்கில் களவாக மணல் ஏற்றுபவர்களுக்கு ஒத்துழைக் காவிட்டால் கஞ்சா வழக்கு போடுவேன் என அச் சுறுத் தல் விடுகின்றார் எனத் தெரி விக்கப்பட்டது. அது தொடர் பில் உரிய விசாரணை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலை மையில் முன்னெ டுக் கப்படுவதாகவும், விசாரணைகள் முடிவுற்ற தும் நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாகவும் யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (05)

# ஜே.சி.பி. இயந்திரத்தை கழுவும்போது மின்சாரம் தாக்கிக் குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், ஈவினை, கிழக்கு புன்னாலைகட்டுவன் பகுதியில் ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிக் கொண்டு இருந்தவேளை மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அச்சுவேலி - தோப்பு பகுதியைச் சேர்ந்த கிட்டுனன் லோகநாதன் (வயது 39) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த குடும்பஸ்தர் ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிக்கொண்டு இருந்தவேளை, இன்னொருவர் அதனை கழுவுவதற்காக நீர் பாய்ச்சிக்கொண்டு இருந்தார். இதன்போது திடீரென நீருடன் மின்சாரமும் இணைந்து பாய்ச் சப்பட்டதால் அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது. (05)

# யாழ். சங்கானை பொதுச் சந்தைக்குள் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்கு

## பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு சங்கானை பொதுச் சந்தைக்குள் இரவு வேளை அத்துமீறி நுழைந்த குழு ஒன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தி மிரட்டிவிட்டுச் சென்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

திங்கட்கிழமை இரவு சங்கானை பொதுச்சந்தை பாதுகாப்பு நடவடிக்கையில் தனியார் நிறுவனம் ஒன்றின் பாதுகாப்புக் கடமையாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது, அங்கு வந்த போதையில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படும் நபர்கள், யாரோ ஒருவருடைய பெயரைக் கூறி அவர் நிற்கிறாரா? என்று கேட்டிருக்கின்றனர். இரவு வேளை என்பதால் அவர் இல்லை என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்திருக்கின்றனர். இதனை அடுத்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட அவர்களில் ஒருவர் பூட்டப்பட்டிருந்த கதவின் மீது ஏறி உள் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனையடுத்து அயலில் இருந்தவர்கள் சிலர் வந்து பாதுகாப்பு உத்தியோகத்தரைக் காப்பாற்றியிருக்கின்றனர். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

சங்கானைப் பகுதியில் சமூகவிரோதச் செயற்பாடுகள், திருட்டுச் சம்பவங்கள் உட்பட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் சில குழுக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவரும் நிலையில் பொதுச் சந்தை ஒன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றமை தொடர்பில் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்களா? என்று மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (05)

# டிப்பர் வாகனம் மோதியதில் பொலிஸ் கான்ஸ்டபிள் சாவு



மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொல்கஹவெல பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குருணாகல் - பொல்கஹவெல பிரதான வீதியின் புஹூரிய சந்தியில் இடம்பெற்றது.

45 வயதுடைய பொல்கஹவெல பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது

திங்கட்கிழமை இரவு இந்த கான்ஸ்டபிள் வாகனங்களையும் மக்களையும் சோதனை செய்து கொண்டிருந்தபோது, கந்தளாயிலிருந்து கடுவலைக்கு மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் மோதியதில் அவர் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த கான்ஸ்டபிள் பொல்கஹவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரான டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (05)




காலைக்கதிர் Kalaikkathir

## இந்து சமுத்திரம்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

ஆதிக்கத்திற்காக அழுத்தம் கொடுக்கும் பிரதான தரப்புக்களுடனேயே இந்து சமுத்திரத்தின் மூலோபாய அமைவிடம் அதன் இலக்குகளை அடைந்துள்ளது. வர்த்தக பாதைகளுக்கு அருகில் கடுமையாக யுத்தநிலைமையை தக்கவைத்துக்கொள்வதே அவர்களின் தேவையாக உள்ளது.

அதன்படி வலயத்திற்குள் உலக பலசாலிகளின் வருகை அவதானத்துடன் பார்க்க வேண்டிய விடமாகியுள்ளது. இந்து - பசுபிக் வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தின் மூலோபாய முக்கியத்தும் சீனாவின் உலகளாவிய எழுச்சியுடன் தொடர்புடையதாகும்.

ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் சீனாவுக்கிடையில் காணப்படும் அதிகார மோதல்களுக்கு மத்தியில் சீனாவினால் வலய ரீதியாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை ஆராய்வதற்கான அழுத்தங்கள் இந்தியாவின் மீது செலுத்தப்படுகின்றன. இதற்கு இணையாக இந்து சமுத்திரத்திர வலயத்தின் மூலோபாய மற்றும் அரசியல்ரீதியானநகர்வுகள் உலகின் தொடர்சியான அவதானத்திற்குரிய விடயங்களாக மாறியுள்ளன.

புவிசார் மூலோபாய தன்மை வலயத்தின் பயனுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கு முக்கியமானதாக அமைவதால், அதனால் பொதுத் தேவைகளுக்கு அச்சுறுத்தலோ அபாயமோ இருக்காது என்ற எண்ணம் எம்மிடத்தில் இருக்க வேண்டும்.

ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்குச்சமூகம் இந்து சமுத்திரத்தின் மீது அக்கறை காண்பிப்பது முன்னேற்றகரமானது என்பதோடு, இது வலயத்தின் பலசாலிகளின் அழுத்தங்களை அதிகரிப்பதாக அமைந்திருக்காது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதனால் ஒத்துழைப்பின் நிமித்தமாக இந்து சமுத்திர வலயத்தின் பங்குதாரர்கள் அனைவரும் சாதகமான முறையில் கலந்துரையாடலுக்கு முன்னுரிமை அளிப்பது முக்கியமானதாகும். தொடர்பாடல் வழிமுறைகயைளை உறுதிப்படுத்தல், பலதரப்பு இணக்கப்பாட்டிற்கு அமைவான இந்துசமுத்திரவலயத்தின்சட்டங்கள் தொடர்பிலான ஐ.நா உடன்பாட்டை (ஷீஹிளீஸிநுறீ) மையப்படுத்திய சட்டத்தை பின்பற்றுதல் மற்றும் பலதரப்பு மற்றும் இருதரப்பு வரைவுக்குள் பயன்படுத்தக்கூடிய வலயத்தின் இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளைநாம்முன்னெடுக்க வேண்டும்.

வலயத்தின் பாதுகாப்பு திட்டம், வலயத்தின்பொதுவானஅடையாளம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வலயத்தின் தலைமைத்துவ கட்டமைப்பொன்று இல்லாமை என்பன இந்து சமுத்திரம் வலுவான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. சாதகமான பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக நாம் தற்போது காணப்படும் வலய கட்டமைப்பு மற்றும் முன்னெடுப்புக்களுடன் இணைந்துகொள்ளவும் ஒத்துழைப்புக்களை வழங்கவும் முயற்சிக்க வேண்டியது அவசியமாகும்.

தென்கிழக்காசியாவை போன்று விரிவான ஆசிய - பசுபிக் மற்றும் இந்து சமுத்திர வலயங்களின் பாதுகாப்பு திட்டத்தை வடிவமைப்பதற்காக இந்து - பசுபிக் வலய ஆசியான் அமைப்பின் தெரிவுக்கமைய தலைமைத்துவத்தை வழங்க முயற்சிப்போம். இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக அந்த தலைமைத்துவம் அமைந்திருக்கும்.

பிம்ஸ்டெக் மற்றும் ஆசியான் வலய ஒன்றியம் போன்ற ஆசிய அமைப்புக்கள் வலயதினால் பின்பற்ற வேண்டிய ஒத்துழைப்பு முயற்சிகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும். இருப்பினும் மேற்கு அவுஸ்திரேலியா முதல் தென்னாபிரிக்கா வரையில் விரிவடைந்து காணப்படும் பாதுகாப்பு மற்றும் இந்து சமுத்திரத்தை அண்மித்திருக்கும் நாடுகளின் அமைப்புகளும் எம்முடன் உள்ளன. இந்த பொறிமுறையானது அரசியல் ரீதியாக உயர் மட்ட பேச்சுக்களை நடத்துதல் மற் றும் உரிய செயற்பாடுகளை தொடங்குவதற்கான ஒரு சிறந்ததும் வெளிப்படையானதுமான தேர்வாக இருக்கலாம்.

இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் அமைச்சர்கள் மட்டக் கூட்டம் இவ்வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கை அதன் தலை மைத்துவத்தை பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அந்த கூட்டத்தில் மேற்படி தலைப்புக்கள் தொடர்பிலும் பேசப்படவுள்ளது.

இந்து சமுத்திரம் பெருமளவில் மோதல்கள் அற்ற வலயமாக காணப்படும் நிலையில் இந்து பசுபிக் மோதல்களின் தாக்கங்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இருப்பினும் அனைத்துதருணங்களிலும் அதிகார மோதல்களை இந்து சமுத்திரத்திற்கு வெளியில் தக்கவைத்துக் கொள்வது சிறந்தாகும்.

இலங்கை இராணுவ அமைப்புக்களிலிருந்து விலகி நிற்பதோடு இந்து சமுத்திரம் மோதல்கள் அற்றதாக நீடிக்க வேண்டும் என்ற மத்தியஸ்த நிலைப்பாட்டை கொண்டுள்ளது. 1971 களில் இலங்கை ஐ.நா பொதுச்சபையில் இந்து சமுத்திரத்தை மோதல்கள் அற்ற வலயமான அறிவித்திருந்தது. அது வலயத்திற்குள்ளான கடல்வழி போக்குவரத்து மற்றும் வான்வெளி போக்குவரத்தினை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

வலயத்திற்குள்ளும் வெளியிலும் காணப்படும் சேர்க்கையின் அவசியம் மற்றும் தலையீடு ஆகியவற்றை அறிந்துகொண்டு அவற்றை ஒன்றிணைக்க வேண்டிய சவால் எம்மத்தியில் உள்ளது. அதற்காக ஆரம்பத்திற்கு வித்திடும் வகையில் விமானப் படையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

இத்துறையில் பெரும் அனுபவங்களை கொண்ட பேராசிரியர் லியோன் எடம் கொன்வோயும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருக்கிறார்.

பல தசாப்தங்களான விமான உற்பத்திகள் அதிகரித்துள்ளன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மேலும் உற்பத்தி பெருகியது. இதன்போது தொழில்நுட்பங்களுக்கு மாறாக பெரும் அளவிலான உற்பத்தி தொடர்பில் மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டது.

அதேபோல் சம்பிரதாய முறைகளை போன்று துப்பாக்கிச் சூடுகளை நடத்தவும், குண்டுத் தாக்குதல்களை நடத்தவுமே அவை பயன்படுத்தப்பட்டன. மனித உயிர்களுக்கு பெறுமதி இருந்தாலும் மேற்படி விடயங்கள் பற்றியே அன்று அவதானம் செலுத்தப்பட்டது. இருப்பினும் நாம் தற்போது முன்னேற்றம் கண்டுள்ளோம்.

தொழில்நுட்பம், ஆயுத உற்பத்தி மற்றும் அதற்கான மூலப்பொருட்கள் என்பவற்றிலும் முன்னேற்றங்கள் காணப்படுவதோடு, அவற்றின் பயன்பாடுகள் ஊடாகவும் பயன்களை பெற்றுக்கொள்கிறோம்.

முன்னர் ரேடார்களிலிருந்து தப்பித்துக்கொள்ள தாழ்வாக பறக்கும் முறைமை காணப்பட்டது. உலக யுத்தத்தின் போது அந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. இருப்பினும் தற்போது அதற்காக பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களை கொண்டு ரகசியமாக பறக்க முடிந்துள்ளது.

இன்று தாக்குதலை நடத்துவதற்கு விமானங்கள் அவசியமில்லை. அண்மையில் இந்தியா நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு மேலாக பறக்கும் எம்.கியூ-9 பிதானியங்கி ட்ரோன் விமானத்தை விலைக்கு வாங்கியுள்ளது. அவ்வாறான பெரும் முன்னேற்றங்களை காண முடிகின்றது.

இந்த இக்கட்டான நேரத்தில் சுதந்திரமானதும் வெளிப்படையனதுமாக இந்து -பசுபிக் வலயம் இருப்பதை உறுதிசெய்ய முனையும் இலங்கை சிறியதொரு நாடாகும். இலங்கையின் வகிபாகத்தை ஆதரிக்கும் அனைவருக்கும் நன்றி.

ட்ரோன் விமானங்களை வழங்கி இந்தியா உதவும் அதேநேரம், கடற்படை வலிமையை மேம்படுத்துவதற்காக உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது' என்றார்.

## தென்னாபிரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மேம்பாட்டிற்கு தென்னாபிரிக்கா வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி அமைச் சரிடத்தில் நன்றி தெரிவித்தார்.

அது தொடர்பிலான சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவிருப்பதாகவும் வருட இறுதிக்குள் அதனை நடைமுறைப் படுத்த எதிர்பார்த்திருப் பதாகவும் தெரிவித்தார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான வின் தலை மைத்துவத்தை வகிக்கும் காலப்பகுதியில் இந்து சமுத்திரத்தின் தனித்துவத்தை வலுப்படுத்துவதே இலங்கை நோக்கமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வருடாந்தம் இரு தடவைகள் உறுப்பு நாடுகளின் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்த வேண்டுமெனவும், இந்து சமுத்திரம் தனித்துவமான அரசியல் அடையாளத்தை கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இஸ்ரேல் -ஹமாஸ் போராட்டம் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையில் சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற தென்னாபிரிக்காவின் கருத்துக்குதான் ஆதரவளிக்கிறார் எனவும் தெரிவித்தார்.

அதேபோல் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## நாட்டுக்காகவே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு கருத்து தெரிவிக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி என்ற ரீதியில் பலமாக செயற்படுகிறோம். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களுக்கு தயாராகவே உள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளோம். தேசிய தேர்தல்களில் கட்சியின் கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கொள்கைக்கு எதிராக 45 வருடகாலம் அரசியல் செய்த ரணில் விக்கிரமசிங்கவை நாட்டுக்காக ஜனாதிபதியாக்கி அவருடன் ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

எதிராக செயற்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணைய முடியுமாயின் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டவர்கள் பல்வேறு காரணிகளால் பிரிந்து சென்றவர்கள் தாராளமாக ஒன்றிணையலாம்.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம். அதற்கு காலவகாசம் வழங்கப்படும். சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் தோற்றம் பெற்றுள்ளது.

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் அதிகரிப்பதால் பொதுமக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## ஐதேகவிடம்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டோம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிர்வாகத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் தற்போது தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தலுக்கு எதிராகப் போர் கொடி உயர்த்துகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிர்வாகத்தை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டார்களாயின் தாராளமாக தேர்தலை நடத்தலாம் தானே. 2024 ஆம் ஆண்டு தேர்தல் வருடம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை போன்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க ஆட்சியாளர்கள் விசேட கவனம் செலுத்துகின்றனர்.

தேர்தலை பிற்போடும் இந்த ஆட்சியின் முயற்சிகளை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை அரசியல் சூழ்ச்சிகளினால் பிற்போட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். வரலாற்றில் பல விளைவுகள் பதிவாகியுள்ளன.

கட்சியின் கொள்கைக்கு எதிராக நாங்கள் செயற்பட்டுள்ளதாகவும் எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் அடிப்படை கொள்கைக்கும், கட்சி யாப்புக்கும் எதிராகச் செயற்படும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்பதற்காகவே கட்சியில் இருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக சாகர காரியவசம் கடந்த ஒரு வருட காலமாக குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. கட்சியின் கொள்கைகளை நாங்கள் மீறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடிபணிந்துள்ளது. பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைவார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் என்றார்.

## இந்திய....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

'மீண்டும் கொழும்மை வந்தடைவதை இட்டு மகிழ்ச்சி அடைவதாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெய்சங்கர் இன்று இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23ஆவது அமைச்சர் மட்ட கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதோடு கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உள்ளிட்ட அரச உயர்மட்டத்தினரையும் சந்திக்கவுள்ளார்.

இதனையடுத்து நாளை திருகோணமலைக்குச் செல்லும் அவர் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்டவர்களைச் சந்திக்கவுள்ளதோடு இந்திய நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சில திட்டங்களை பயனாளிகளிடம் கையளிக்கவுள்ளார்.

தொடர்ந்து திருகோணமலையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள ஏனைய திட்டங்கள் குறித்தும் அவர் ஆராயவுள்ளதோடு, வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணஸ்வர ஆலத்தில் வழிபாடுகளிலும் பங்கேற்கவுள்ளார்.

முன்னதாக, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 2ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவிருந்த நிலையில், கடைசி நிமிடத்தில் அவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

## ஐதேகவிடம்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

செய்தியில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை பெற்றுக்கொண்ட கடன்களின் மறுசீரமைப்பிற்கு சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியான எக்ஸிம் வங்கியுடன் தொடக்கநிலை உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

சீனாவை தவிர ஏனைய இருதரப்பு கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைப்பதற்கு எதிர்வரும் சில தினங்களில் இணக்கம் தெரிவிக்கவுள்ளனர்.

எனினும், குறித்த ஒப்பந்தம் தொடர்பிலான கூடுதல் தகவல்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை ஏனைய கடன் வழங்குநர்களுக்கு இடையிலான கலந்துரையாடலில் சீனநிதிநிறுவனங்கள் கண்காணிப்பு மட்டத்தில் பங்குபற்றியிருந்தன.

இலங்கையின் இருதரப்பு வெளிநாட்டுக் கடனில் சுமார் 51 சத வீதத்தை சீனா வழங்கியுள்ளதுடன், இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட இருதரப்பு கடன் வழங்குநர்கள் சீனாவுடன் அல்லது சீனாவின் பங்களிப்பு இன்றி கடன் மறுசீரமைப்பிற்கான உடன்பாட்டை எட்டுவதாக அண்மையில் தெரிவித்திருந்தனர்.

மொராக்கோவில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த கூட்டத்தில் இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட திட்டமிட்டுள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆஸி.....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பின் பரந்துபட்ட பகுதிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, காலநிலை மாற்றம் மற்றும் நாடு கடந்த குற்றச்செயல்கள் போன்ற பொதுவான சவால்களை நிவர்த்தி செய்வதற்கு நாம் எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்பட முடியும் என்பது குறித்து நான் எனது இலங்கைச் சகாக்களுடன் கலந்துரையாட இருக்கின்றேன் என்று ஆஸ்திரேலிய ஆயலுறவுத்துறை உதவி அமைச்சர் டிம் வொட்ஸ் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவின் ஒரு முக்கிய பங்காளியாக இருக்கும் இலங்கைக்கு நான் இன்று பயணம் செய்கின்றேன். ஆஸ்திரேலியாவின் சுபீட்சமும் பாதுகாப்பும் இந்து சமுத்திரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளன.

இப்பிராந்தியத்தின் நாடுகள் எம்முடன் ஒத்துழைக்கவும் வணிகம் செய்யவும் வளர்ச்சியடையவும் தக்க அமைதியான, நிலையான, செழிப்பானஓர் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் எமக்கு வலுவான ஆர்வம் உள்ளது.

நான் இலங்கையில் தங்கியிருக்கும்போது இந்துசமுத்திர விளிம்பு நாடுகள் சங்கத்தின் அமைச்சர்கள் மன்றம் நடத் தும் 23ஆவது கூட்டத்தில் அவுஸ்திரேலியாவைப் பிரதிநிதித்துவம் செய்வேன்.

கடல்சார் பாதுகாப்பு மற்றும்

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install



இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



+94 21 222 8358

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# நிறைவேற்று அதிகாரத்தால்தான் நாட்டை முன்னேற்ற முடிந்தது

## அடித்துக் கூறுகிறார் லக்ஸ்மன் விஜேமான்ன

நிறைவேற்று அதிகாரம் என்ற ஒன்று ஜனாதிபதிக்கு உள்ளபடியால் தான் நாட்டை இந்தளவிற்கு முன்னேற்றக் கூடியதாகவுள்ளது. - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்வதற்கு தற்போது எங்களுக்கு எவ்வித யோசனையும் இல்லை. ஆனால் அனைவரினதும் கோரிக்கைக்கு அமைவாக அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுமானால் அதனை நாங்கள் எதிர்க்கமாட்டோம்.

ஜனாதிபதி தேர்தல் நடத்துவது தொடர்பாக நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருக்கின்றோம்.

இல்லாத ஒன்றை பிடித்துக்கொண்டு எதிர்க்கட்சியினர் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்கட்சியினர் கூறுகின்றமை போல் எந்தவொரு விடயமும் தற்போது அரசியலில் நடைபெறவில்லை. - இவ்வாறு லக்ஸ்மன் விஜேமான்ன தெரிவித்துள்ளார். (05)

# சஜித்துடன் பெரமுன இரகசியமான பேச்சு?

## எஸ்.எம். மரிக்கார் சந்தேகம்

மொட்டுக் கட்சியில் இருந்து கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியுடன் சிலர் இரகசியப் பேச்சுகளை முன்னெடுப்பதாக அற்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஜனாதிபதி தேர்தலை எப்போதும் பிற்போட முடியாது. அரசமைப்பின்படி அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 134 இல் ஆரம்பித்து 113 இற்கு இறங்கி இருக்கின்றார்.

ஆகவே, மொட்டு கட்சியில் இருந்துக்கொண்டு கடைக்கு செல்லும் சிலருக்குக் கூறுகின்றேன். உங்கள் கட்சியிலுள்ள சிலர் எங்களுடன் இரகசியமாகப் பேச்சுப் நடத்துகின்றார்கள். அடுத்த வரும் வேட்பாளர் பட்டியல் கோரப்படும் இந்தத் தீர்க்கமான சந்தர்ப்பத்தில் அந்தப் பக்கத்தில் இருந்து இந்த பக்கத்துக்கு எத்தனை பேர் வருவார்கள் என்று தெரியாது.

வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய பெரும் சவாலிலுள்ள ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டை பெற்றுக்கொள்ளவும் முடியாது. நாங்கள் தரப்போவதும் இல்லை' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# கட்சியைவிட்டு சென்றவர்கள் விரும்பினால் மீண்டும் பெரமுனவுடன் இணையலாமாம்

'தங்கள் கட்சியின் கதவு எப்போதும் திறந்திருக்கின்றது என்றும், கட்சியை விட்டு சென்றவர்கள் மீண்டும் வர விரும்பினால் மீண்டும் தங்களுடன் இணைந்துக்கொள்ளலாம்' என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

'பலர் பல கட்சிகளை அமைத்துக் கொண்டார்கள். இது அவர்களின் ஜனநாயக உரிமை.

அவர்கள் மீண்டும் நம் கட்சிக்கு வருவார்களா என்று தீர்மானித்ததன் பின்னர் அது பற்றி யோசிக்க முடியும். நம் கதவு எப்போதும் திறந்திருக்கின்றது யார் என்றாலும் வர முடியும். போகவும் முடியும். சென்றவர்கள் மீண்டும் வர நினைப்பார்களானால் வரலாம்.

45 வருடங்கள் எனது தந்தைக்கு எதிரியாக இருந்த ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்க முடியுமானால் 45 வருடங்கள் எனது தந்தையுடன் இருந்தவர்களுடன் கலந்துரையாடுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

அத்தோடு தற்போது நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் விலை அதிகரிப்புகளைக் கவனத்தில் கொண்டு அரசாங்கத்துடன் கலந்துரையாடி கிராமிய மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். வரவு செலவு திட்டத்திலும் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்' இவ்வாறு நாமல் தெரிவித்துள்ளார். (05)

# உலக உளநல தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு நாடகம்





வவுனியாவில் உளநல தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு நாடகம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அரங்காலயா கலைக்கூட கலைஞர்களால் குறித்த உளநலன் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் நிகழ்த்தப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலகமும், மாவட்ட பொது வைத்தியசாலை உளநல பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் உளநல வைத்தியர் எஸ். சுதாகரன், வைத்தியர் திருமதி வைதேகி திலீபன், மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுகாசினி சிவதர்சன், உளநலத்துறை உத்தியோகத்தர் திருமதி துாந்தன் பிரியதர்சினி, பாடசாலையின் அதிபர் நா. இந்திரகுமார், ஈச்சங்குளம் கிராம சேவகர் ஜே. அமலதாஸ் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# எகிறவுள்ளது சிமெந்து விலை!

சீமெந்து இறக்குமதி நிறுவனங்கள் விலையை அதிகரிக்கச் செயற்படுவதாகவும் அதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றத்தின் தலைவரும் தேசிய நிர்மாண சங்கத்தின் முன்னாள் தலைவருமான சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.

எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று(செவ்வாய்க் கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம் கைத்தொழில் துறை மற்றும் அனைத்து வர்த்தகத் துறைகளும் அதிக செலவீனங்களைச் சுமக்க நேரிடும் எனவும், இலங்கைக்கு பொருள்களை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் திங்கட்கிழமை வெளியிட்டிருப்பதால் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். (05)

# சபாநாயகரின் பிறந்தநாள்: கேக்வெட்டி கொண்டாட்டம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடும்; நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குானி ரோஹணதீர ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியின் போது கேக் வெட்டி பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதி பணிமனையின் பிரதானி சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (05)

# சி.ரி. ஸ்கான் சேவைகள் இடைநிறுத்தம் வைத்தியசாலையில் சிறுவர்கள் பாதிப்பு

## சீமாட்டி ரிட்ஜ்வேயில் அவலம்

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சி.ரி. ஸ்கான் சேவை முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது என அரச கதிரியக்கதொழில்நுட்பவல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சி.ரி. ஸ்கான் இயந்திரம் தொடர்பான நிறுவனத்துடனான சேவை ஒப்பந்தம் கடந்த இரண்டு வருடங்களாக புதுப்பிக்கப்படாமையால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்காரணமாகப் பொதுமக்கள், சிறுவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சில நாள்களில் இயந்திரத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார். (05)

## ஆஸி.....

(எட்டாம்பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு, நீலப் பொருளாதாரம் (கடல் வளங்களை பேண்தகு முறையில் பராமரித்தல்), காலநிலை மாற்றம், இந்தோ-பசிபிக் மீது ஐமுசுயு செலுத்தும் கண்ணோட்டம் என்பன குறித்து நாம் கலந்துரையாடுவோம்.

இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான ஐமுசுயு தலைமைப் பதவியை இக் கூட்டத்தில் பொறுப்பேற்றுக்கொள்ளும். தலைமைப் பதவியை வகிக்கும் காலம் முழுவதும் இலங்கைக்கு உதவ அவுஸ்திரேலியா ஆவலாயிருக்கின்றது.

ஆஸ்திரேலியாவும் இலங்கையும் வியாபார, கல்வி, விளையாட்டு போன்ற துறைகளில் நீடித்திருக்கும் உறவுகளைப்பகிர்ந்துகொள்கின்றன. நவீன அவுஸ்திரேலியாவின் உயிர்த்துடிப்புக்கு பங்களிக்கும் இலங்கைப் பாரம்பரியத்தைக் கொண்ட 130,000 இற்கும் மேற்பட்ட மக்களுடன், நெருக்கமான தொடர்புகளையும் இவ்விரு நாடுகளும் பகிர்ந்துகொள்கின்றன.

விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நான் ஆவலாயிருக்கின்றேன். விளையாட்டுகள் எம்இரு நாடுகளையும் பிணைக்கும் ஒரு மகத்தான பிணைப்பாகும்.

புதுப்பிக்கப்பட்ட வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்படுவதன் மூலம் இலங்கையுடனான எமது வளர்ந்துவரும் பொருளாதார உறவுகள் மேலும் மேம்படும். இது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும் உதவியாக இருக்கும்.

விவசாயம், மீன்வளர்ப்பு, சுற்றுலா போன்ற துறைகளில் இலங்கையின் அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு எமது அபிவிருத்தித் திட்டம் உதவுகின்றது.

காலநிலை மாற்றம், நாடு கடந்த குற்றச்செயல்கள் போன்ற பொதுவான சவால்களை நிவர்த்தி செய்வதற்கு நாம் எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்பட முடியும் என்பது பற்றியும் நான் எனது இலங்கைச் சகாக்களுடன் கலந்துரையாட இருக்கின்றேன் என்றார்.

# ஹரீன், மனுஷ ஆகியோரின் மனுக்கள் விசாரணைக்கு!

தமது கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானத்தை இரத்துச் செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுக்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் பெரேரா, நீதிமன்றத்தில் ஆஜராகி, மனு தொடர்பான எதிர் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு ஒத்திவைக்குமாறு கோரினார்.

அரசமைப்புச் சட்டத்தின்படி, இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் உச்ச நீதிமன்றம் மனுக்களின் விசாரணையை முடிக்க வேண்டும் என்று பிரதிவாதி தரப்பு சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் அமர்வு, இந்த மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் இருந்தால் இன்றே தாக்கல் செய்யுமாறு மனுதாரர்களின் வழக்கறிஞர்களுக்கு உத்தரவிட்டது.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 12ஆம் திகதி இடம் பெறவுள்ளது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2023இல் வெளியிடப்பெற்றது.